# பேரிடரில் முதல் நிலை மீட்பாளர்களுக்கான பயிற்சி

# கையேடு



## குறுவட்ட அளவிலான முதல் நிலை ஒரு நாள் பயிற்சி

## தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை

## எழிலகம் இணைப்பு கட்டிடம், 5-வது தளம், சேப்பாக்கம், சென்னை – 05.

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பயிற்சி வழங்கிடுவோருக்கு ஒரு சிறுகுறிப்பு | 1 – 6 |
| 2 | பேரிடர் மேலாண்மையின் சமுதாயத்தின் பங்கு | 7 – 8 |
| 3 | இயற்கைப் பேரிடர்கள் ஏற்பட காரணம் | 9 – 10 |
| 4 | பேரிடர் பற்றி நாம் ஏன் அறிந்து கொள்ள வேண்டும் | 11 |
| 5 | பேரிடரை புரிந்து கொள்ளல் | 12 – 14 |
| 6 | சுனாமி | 15 – 16 |
| 7 | புயல்கள் | 17 – 18 |
| 8 | வெள்ளப்பெருக்கு | 19 |
| 9 | வறட்சி | 20 – 21 |
| 10 | நிலச்சரிவு | 22 |
| 11 | நில நடுக்கம் | 23 - 26 |
| 12 | இடியுடன் கூடிய மழை, மின்னல் தாக்குதல்கள் | 27 |
| 13 | அனல்காற்று | 28 – 29 |
| 14 | தீ விபத்துகள் | 30 |

## 1. பயிற்சி வழங்கிடுவோருக்கு ஒரு சிறுகுறிப்பு

### பயிற்சியின் நோக்கம்

நாம், சமீப காலத்தில் பேரிடர்களான புயல், வெள்ளம், சூறாவளி, நிலச்சரிவு, வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இதன் காரணமாக, மனித உயிரிழப்பு, கால்நடைகள் உயிரிழப்பு, வீடுகள், விளைநிலங்கள் பாதிப்பு, வாழ்வாதாரங்கள் பாதிப்பு. இவற்றால் பாதிக்கப்படுகிறோம். கோவிட்-19 எனும் நோய்த்தொற்று நமது துயரங்களை மேலும் பன்மடங்காக்கியது.

நாம் வசிக்கும் இயற்கைச்சூழல் தொடர்ந்து மாறி வருகிறது. இது மிகப்பெரிய புதிராக உள்ளது. பருவமழைக்காலத்தில் மட்டுமே மழை பெய்யும் என்ற நிலைமாறி, பருவம் தவறி பெருமழை பெய்கிறது. வடகிழக்குப் பருவமழை காலங்களில் (அக்டோபர் முதல் டிசம்பர்) புயல் வரும் என்ற நிலை மாறி புயல் மற்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலங்களில் பாதிப்பு எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்படுகிறது. வரையறுக்க முடியாத வகையில் காலமாற்றம் ஏற்பட்டு வருகிறது. இத்தகைய இயற்கையின் மாறுபடும் காலமாற்றம் மற்றும் இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ள நமது திறனை வளர்த்துக்கொள்ளவே இப்பயிற்சி.

இயற்கைச் சீற்றங்களின் போது, மக்களையும் அவர்தம் உடமைகளையும் காப்பாற்ற வேண்டிய பெரும் கடமை அரசாங்கத்திற்கு உள்ளது. முன்னெச்சரிக்கை வழங்குவது, பேரிடர் காலங்களில் மீட்புப்பணி, நிவாரணம் வழங்குதல் மற்றும் பேரிடர் பாதிப்புகளை மறுசீரமைத்தல் அரசின் பொறுப்பாகும்.

ஆனால், எத்தகைய பேரிடர்களையும் தாங்கும் வல்லமை கொண்ட சமுதாயத்தை உருவாக்குவது நமது அனைவரின் பொறுப்பாகும். அரசுத் துறைகளின் நோக்கம் மற்றும் செயல்பாட்டோடு சமுதாயத்தின் எண்ணமும் செயலும் ஒன்றினையும் போது மட்டுமே பேரிடர்களை எதிர்கொள்ளும் வல்லமையை நாம் அடைய முடியும். இத்தகைய ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்கு முன்னுதாரணமாக பல நிகழ்வுகள் சமுதாய

பங்களிப்போடு நிறைவேறியுள்ளன. இந்த நிகழ்வுகளில் சமுதாயத்தைச் சார்ந்த / அந்தந்த கிராமங்களைச் சார்ந்த தன்னார்வலர்கள் மிகப்பெரிய பங்காற்றியுள்ளார்கள். இத்தகைய தன்னார்வலர்களை கண்டறிந்து, அவர்களின் தன்னார்வத்தைப் பாரட்டி, அவர்களின் பல்வேறு தனித்தனி திறன்களை பட்டைத்தீட்டி, பேரிடர்களின் போது மட்டுமல்லாமல், அனைத்துக் காலங்களிலும், அவர்களின் சேவையினை, சமுதாயத்திற்கு தொடர்ந்து பெற்றிடுவதும், இம்முன்னெடுப்பை, ஒரு மக்களின் இயக்கமாக உருவாக்குவதும் இப்பயிற்சியின் நோக்கமாகும்.

இப்பயிற்சி முழுவதுமே, பங்குபெறும்தன்னார்வலர்களின் தங்குதடையற்ற கலந்துரையாடல்கள் மூலம், அவர்களிடமிருந்து கருத்துக்களையும், அனுபவங்களையும் தெரிந்து கொண்டு, மேலும் அவர்களுக்கு புதிய தகவல்கள் புதிய அனுபவங்கள் குறித்து விளக்கி, அவர்களின் தன்னார்வத்திற்கும், தன்னம்பிக்கையும் கூட்டி உயிர் காத்திடும் பேரிடர் கால சேவையில் அவர்கள் தொடர்ந்து பங்கேற்றிட உதவிடும் முயற்சியாகும்.

## பேரிடர் குறித்த அனுபவங்களை தொகுத்தல்

1. இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்கள், தங்கள் பகுதியில் ஏற்பட்ட பேரிடர்கள் குறித்து அறிந்தவர்களாகவோ, தன்னார்வலர்களாக சேவையாற்றி பொதுமக்களுக்கு உதவியவர்களாக இருக்கலாம்.
2. எனவே, அவர்களிடமிருந்து, அவரவருக்கு தெரிந்த பேரிடர்கள் குறித்தும், அவர்களின் அனுபவங்களை சுருக்கமாகத் தெரிந்து கொள்ளவும் அவற்றை பட்டியலிடவும்.
3. அவற்றைத் தொகுத்து, பேரிடர் குறித்த இதர தகவல்களையும் சேர்த்து, மேற்கொண்டு என்ன தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கேள்வியுடன் அவர்களின் ஆர்வத்தை தூண்டவும்.
4. அரசோடு இணைந்து சமுதாயம் செயல்படும் பொழுது தான் பலன் கிடைக்கும் என்பதை விளக்கவும்.










TN05


0
-10
-20
-30
-40
60
40
20
0
-20
-40














## 2. பேரிடர் மேலாண்மையின் சமுதாயத்தின் பங்கு

சுனாமி, பெருவெள்ளம், வர்தா புயல், கஜா புயல், நிவார், புரெவி புயல் போன்ற பேரிடர் காலங்களில் சமுதாயம் பெரும்பாங்காற்றியுள்ளது. அனைவரும் அறிந்தே சமுதாயம் என்று குறிப்பிடும் பொழுது, ஒட்டுமொத்த சமுதாயம் குறிப்பாக தன்னார்வலர்களின் பங்கு அளப்பரியதாகும். சமுதாயத்தின் இத்ததைகய செயல்பாடுகளால் காய்யபாற்றப்பட்ட உயிர்கள், பாதுகாக்கப்பட்ட உடமைகள், பேரிடர் காலங்களில் உணவளித்தவர்கள், குடிநீர் வழங்கியவர்கள், மருத்துவ உதவிபெற காரணமாக இருந்தவர்கள், அரசுத்துறைகளுடன் கைகோர்த்து இணைந்து செயல்பாட்டவர்கள் ஏராளம். இந்த பயிற்சியில் உள்ளவர்களும் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளலாம்.

உலகமே வியந்து பாராட்டிய கடலூர் மாவட்டம் சாமியார் பேட்டை அனுபவங்களைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

வீடியோ

**TNSDMA வளைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும்.**

மிகச்சிறிய கிராமமான சாமியார் பேட்டை மக்கள் கற்றுக்கொண்ட அனுபவங்களை பயன்படுத்தியதால் சுனாமி காலத்தில் உயிரிழப்பு மற்ற கிராமங்களைக் காட்டிலும் மிகக் குறைவாக இருந்ததை நீங்கள் பார்த்தீர்கள்.

ஒவ்வொரு கிராமத்தைச் சேர்ந்த தன்னார்வலர்களும் இதைப்போல பல உயிர்களை காப்பாற்றும் வாய்ப்பு உள்ளது.

- முன்னெச்சரிக்கைத் தகவல்களை தங்கள் பகுதி மக்களுக்கு கொண்டுசெல்வது

- மீட்புப்பணிகளில் அரசுத்துறைகளுடன் இணைந்து செயல்படுவது

- தங்களின் நீச்சல் திறனால், வெள்ளத்திலிருந்து குழந்தைகள், வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்களை காப்பாற்றுவது


- முதலுதவி செய்வது

- குடிநீர் விநியோகம்

- இவையின்றி சிறப்பு பயிற்சிகள் பெற்று பல்வகை மீட்புப்பணிகள் மேற்கொள்ளவும் வாய்ப்புள்ளது.

அரசு எவ்வளவு தயார்நிலையிலிருந்தாலும், சமுதாயம் இணைந்து செயல்பட்டால் தான், பேரிடர்களில் சவால்களை எதிர்கொள்ள முடியும். சமுதாயம் எனும்போது தன்னார்வலர்களின் பலமே சமுதாயத்தின் பலமாக அமைகிறது.

இச்சீரிய சேவையில் தங்களை ஈடுபடுத்திடவே இப்பயிற்சி.


தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை
பொதுமக்கள் பங்களிப்புடன் பேரிடர் மேலாண்மை
கிராம பேரிடர் மேலாண்மை திட்டம்
தேடுதல் அணி
அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்களை ஒருங்கிணைத்து, தன்னார்வலர்களை தெரிவு செய்து குழுக்களாக அமைத்து, விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு பயிற்சிகள் அளித்து பேரிடரின் போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.
முதலுதவி அணி
தங்குமிடம் பராமரிப்பு அணி
முன்னெச்சரிக்கை அணி
மாநில அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1070
மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1077
கைப்பேசி செயலி: tnsmart
94458 69848
@tnsdma
tnsdma Tamilnadu
tn_sdma
www.tnsdma.tn.gov.in

### 3. இயற்கைப் பேரிடர்கள் ஏற்படக் காரணம்

புயல், வெள்ளம், வறட்சி போன்றவை இயற்கையாக நிகழ்பவையே. ஆயினும் அவற்றின் பாதிப்பையும் தீவிரத்தையும் மனித செயல்பாடுகள் அதிகப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக

| | | |
|---|---|---|
| வெள்ளம் | - | • நீர்வரத்து மற்றும் வடிகால் பகுதிகளில் ஆக்கிரமிப்பு மற்றும்<br>• குடியிருப்புகளை ஏற்படுத்துதல் |
| வறட்சி | - | • காட்டை அழித்தல்<br>• மேய்ச்சல் நிலங்களைப் பிற பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளுதல்<br>• நீர் நிலைகளை தூர்த்து மற்ற உபயோகங்களுக்கு பயன்படுத்துதல்<br>• நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துதல் |
| நில அதிர்வு / பூகம்பம் | - | • போதிய கட்டுமான வரைமுறைகள் இன்றி வீடுகள், தொழில் கூடங்கள் அமைத்தல் |
| சுனாமி | - | • கடலோரப் பகுதிகளில் கட்டடங்கள் / குடியிருப்புகளை ஏற்படுத்துதல்<br>• காடுகளை அழித்தல்<br>• கடற்கரை மண் மேடுகளை அகற்றுதல்<br>• பவளப்பாறைகளை அழித்தல் |
| புயல் | - | கடலோரக்காடுகளை அழித்தல் |

பேரிடர்கள் ஏற்பட சமுதாயம் எவ்வகையில் காரணமாக உள்ளது?


தாக்கும் தன்மையைப் பொறுத்துக் பேரிடர்களைத் திடீரெனத் தாக்குபவை கால அவகாசத்துடன் தாக்குபவை எனப் பிரிக்கலாம்.

| **திடீரென தாக்கும் பேரிடர்கள்** | கால அவகாசத்துடன் **தாக்குபவை** |
|---|---|

| | |
|---|---|
| - நில நடுக்கம்<br>- விஷவாயுக் கசிவு<br>- அணுக்கதிர்வுக்கசிவு<br>- விபத்துக்கள் | - புயல் / வெள்ளம்<br>- வறட்சி |

**பேரிடர் மேலாண்மை:**

1. பேரிடர் தயார் நிலை (Prevention and Early Warning)
2. மீட்பு (Search and Rescue Emergency Relief)
3. புணரமைப்பு மற்றும் புதுப்பித்தல் (Reconstruction and Rehabilitation)
4. பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு (Prevention & Mitigation)



## 4. பேரிடர் பற்றி நாம் ஏன் அறிந்து கொள்ள வேண்டும்

பேரிடரினால்

1. மனித உயிரிழப்பு ஏற்படுகிறது.
2. பெருவாரி நோய்தொற்றுகளில் கோடிக்கணக்கான மதிப்புள்ள கால்நடைகள், பறவையினங்கள் அழிந்து பெரும் பொருட்சேதத்தை ஏற்படுத்துகிறது.
3. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் 73 சதவிகிதம் மக்கள் வாழ்கின்றனர். அடிக்கடி வரும் வறட்சியால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைகின்றன.
4. பேரிடர்களின் எண்ணிக்கையும், தீவிரமும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. சென்ற பத்தாண்டுகளில் நடைபெற்ற பேரிடர்களின் எண்ணிக்யைக் காட்டிலும் 2000-ல் அதிக எண்ணிக்கை பேரிடர் நிகழ்துள்ளன. இயற்கைப் பேரிடர்களுடன் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பல பேரிடர்களும் அதிகரித்து வருகின்றன.
5. பேரிடர்களால், பல ஆண்டுகளாக அரசு மற்றும் கூட்டுறவில் உருவான வளர்ச்சி அளிக்கப்பட்டு பொருளாதார பின்னடைவு ஏற்படுகிறது. இவற்றை புனரமைக்க மீண்டும் பெரும் நிதியும் காலமும் தேவை.
6. இதுவரை நாம் கண்டிராத பேரிடர்களும் தோன்றியிருக்கின்றன. அடிக்கடி நிகழ்கின்றன. சேதங்களை ஏற்படுத்துகின்றன. (உம்)
    - பூகம்பம்
    - சுனாமி (ஆழிப்பேரலை)

எனவே பேரிடர் பற்றி சமுதாயம் அறிந்திருக்க வேண்டும்

## 5. பேரிடரை புரிந்து கொள்ளல்

பேரிடரின் விளைவுகளைத் தடுப்பது அல்லது குறைப்பது என்றால் அதைப்பற்றிய புரிதல் அவசியம், பேரிடர்களில் சில இயற்கையானவை, சில செயற்கையானவை (மனிதரால் உருவாக்கப்பட்டவை) என அறிந்துள்ளோம் அவற்றுக்குக் கீழ்க்கண்ட சில பண்புகள் ஒன்றோ பலவோ இருக்கலாம்.

- அவை தனிநபர்கள் மற்றும் சமுதாயத்தை சீர்குலைக்கின்றன.
- இயல்பான வாழ்க்கையை பாதிக்கின்றன.
- பொதுவாக அவை நிகழ்வதையோ அதன் விளைவுகளையோ நாம் முன்கூட்டியே கணித்தறிய முடிவதில்லை.
- அவற்றைச் சமாளிப்பதில் நம்மிடம் இயல்பாக உள்ள திறன்கள் போதுமானதாக இருப்பதில்லை.
- பேரிடர்களைச் சமாளிப்பதில் சமுதாயம் அரசுத்துறைகள் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது.
- பூகம்பம் திடீரென ஏற்படுகின்றது.
- மனிதர்கள், கால்நடைகள், பயிர்கள், ஆரோக்கியம், சொத்து, சுற்றுச்சூழல் ஆகியவற்றை சேதப்படுத்துக்கின்றன.
- சாதாரண அறிவார்ந்த தடுப்பு நடவடிக்கைகளுக்கு இவை அப்பாற்பட்டவை.
- பேரிடர்கள் சிக்கலானதும் புதிர் போலவும் தோன்றினாலும், பேரிடர்களுக்குச் சில பொதுக் கூறுகள் உள்ளன. அவற்றைப் புரிந்து கொள்ளுதல் பேரிடர்களைச் சமாளிப்பதில் நன்கு உதவும், அக்கூறுகளாவன.

    1. சேத நிகழ்வு (Hazard)
    2. சேத அபாயம் அல்லது இடர் (Risk)
    3. பாதிக்கப்படுபவரின் பலவீன நிலை (Vulnerability)

**சேத நிகழ்வு**

ஒரு பேரிடரைத் தோற்றுவிக்கும் ஆற்றல் உள்ள எந்த ஓர் இயற்கை அல்லது மனிதரால் உருவாக்கப்பட்ட நிகழ்வையும் சேத நிகழ்வு என அழைக்கலாம்.

இதற்கு எடுத்துக்காட்டாக,

நிலநடுக்கம், மண்சரிவுகள், வெள்ளம், எரிமலை வெடிப்புகள், சுனாமி, வறட்சி, பொருளாதாரச் சீர்குலைவு, போர்

- இந்த நிகழ்வுகள் பேரழிவாக மாற வேண்டும் என்று தேவையில்லை.
- சேத வாய்ப்புள்ள நிகழ்வை
  - வெள்ளத்தடுப்புக் கட்டுமானங்கள்
  - வடிகால் வசதி
  - மலைப்பகுதிகளைப் பலப்படுத்துதல் போன்ற சில நடவடிக்கைகள் மூலம் குறைக்கலாம்.

**சேத அபாயம் அல்லது இடர்**

ஒரு குறிப்பிட்ட சேத நிகழ்வு ஏற்படுவதற்கும் அதனால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படும் வாய்ப்பையே சேத அபாயம் எனப்படும்.

**பாதிப்பிற்கான பலவீன நிலை**

**ம**க்களின் உயிர், வாழ்வாதாரங்கள் மற்றும் கட்டுமானங்கள் போன்றவை ஒரு பேரிடரினால் எந்த அளவிற்கு இழப்பிற்கோ சேதத்திற்கோ உள்ளகின்றன என்ற பாதிப்பிற்கான பலகீன நிலை எனப்படுகிறது.

பாதிப்பிற்கான பலகீன நிலை, இயற்கை அமைப்பு, சமூகநிலை, பொருளாதார நிலை, கல்விநிலை, ஆரோக்கியநிலை, போன்ற பல்வேறு காரணங்களைச் சார்ந்து வெவ்வேறு பிரிவினருக்கு வேறுபடக்கூடும்.

எடுத்துக்காட்டாக,

வறட்சி ஏற்பட்டால் ஒரே ஊரில் உள்ள கிணற்றுப் பாசன வசதி உள்ள விவசாயியையும், மானாவாரி விவசாயியையும் வேறுப்பட்டப் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். இங்குப் பாசன வசதியில்லாத விவசாயியின் பாதிப்புக்கு ஆளாகும் நிலை பாசன வசதி உள்ள விவசாயியைக் காட்டிலும் அதிகம். அதே போல் வெள்ளச்

சேத பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை கான்கிரீட் தளம் உள்ள குடியிருப்பவரைக்காட்டிலும் கூரை வீட்டில் குடியிருப்பவருக்கு அதிகம்.

சேத நிகழ்வுகள், நமது சக்திக்கு அப்பாற்பட்டவை. இடரும், பாதிப்புக்கு உள்ளாகும் நிலையும் சேராத வரை அது பேரிடராக மாறுவதும் இல்லை. ஆனால் தனிநபர், சமுதாயம் மற்றும் அரசு அளவில இடர் மற்றும் பாதிப்பிற்கு உள்ளாகும் அம்சங்களில் செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதன் மூலம் ஒரு சேத நிகழ்வின் சேத ஆற்றலைக் குறைக்க முடியும்.

பேரிடர் மற்றும் அதன் கூறுகளைப்பற்றி அறிந்த பின்பு மட்டுமே பேரிடர் மேலாண்மையை மேற்கொள்ள முடியும், பேரிடர் மேலாண்மை ஏழுபடி நிலைகளைக் கொண்டது, இப்படிநிலைகள் தொடர்ச்சியானவை. ஓரளவு, இணைந்தும் செல்லும், மேலும் இவை வட்டப்பாதையில் அமைந்தவை. எனவே ஒன்றிலிருந்து மற்றொன்று இடைத்தொடர்பு கொண்டவை.

**பேரிடர் வாய்ப்பைக் கண்டறிதல்**

அச்சுறுத்தல் வாய்ப்புள்ள ஒரு நிகழ்வை பொதுவாக பேரிடர் வாய்ப்பு எனக்கூறுகிறோம். இப்பேரிடர் வாய்ப்பு சூறாவளிபோல் இயற்கையானதாகவோ, ஒரு தொழிற்சாலையிலிருந்து எதிர்பாராது வெளியிடப்பட்ட அபாயகரமான பொருள் போன்ற மனிதரால் உருவாக்கப்பட்டதாகவோ இருக்கலாம். இம்மாதிரியான பேரிடர் வாய்ப்பைக் கண்டறிய சம்பந்தப்பட்ட நாடு அல்லது வட்டாரத்தைக் கவனமுடன் ஆய்வு செய்ய வேண்டும்.

இதற்காகப் பல்வேறுப்பட்ட நிபுணத்துவம் பெற்ற அமைப்புகள், நிறுவனங்களிலிருந்து கடந்தகால பேரிடர் தொடர்பான நிகழ்வுகள் உள்ட்ட தகவல்கள் தேவைப்படும். இப்பேரிடர் வாய்ப்பு கண்டறிதல் முறை மூலம் பேரிடர் வாய்ப்பு வரைபடம் தயாரிக்க வேண்டும. இந்த வரைபடம் மூலம் இயற்கை அல்லது மனித பேரிடர் வாய்ப்பு எங்கு நிலவுகிறது என்பதை புவியியல் முறையில் நிறுவ முடியும். இப்பேரிடர் வாய்ப்பிற்கும் மக்கள் குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கும் உள்ள தொடர்பு மூலம் சேத அபாயத்தை உணர முடியும்.

**1. இலக்காகும் நிலையை அளவிடுதல்**

மேற்குறிப்பிட்ட முறையில் பேரிடர் வாய்ப்பைக் கண்டறிவதன் மூலம் பேரிடரால் ஏற்படும் சேதம் அல்லது அழிவிற்கு இலக்காகும் நிலையிலுள்ள

குடியிருப்புகள், மக்கள் மற்றும் சொத்துகளை பெரும்பாலும் துல்லியமாக கண்டிறிய முடியும்.

## 2. சேத அபாயத்தை மதிப்பிடுதல்

சேத அபாயத்திற்கு இரு பரிமாணங்கள் (அம்சங்கள்) உள்ளன.

1) எத்தனை முறை நிகழ்கிறது (Frequency)

2) தீவிரம் (Intensity)

## 6. சுனாமி

டிசம்பர் 26, 2004 இல் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தினால் 1,50,000-க்கும் மேற்பட்டோர் இறந்தனர். இப்பேரிடரால் ஏற்பட்ட மன அழுத்தம், பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் இழப்புகளின் அளவினை கணக்கிட முடியாது. பல கிராமங்களின் வாழ்வாதாரங்கள் முற்றிலும் பாதிப்படைந்தன. கடந்த 40 ஆண்டுகளில் இதுவரை ஏற்பட்ட நிலநடுக்கங்களில் இதுவே மிகப் பெரியதாகும். ஒரே இரவில் நிகழ்ந்த இந்தப் பேரிழப்பு எவராலும் நினைத்துப் பார்க்க இயலாத ஒன்று. மேலும் இது உலகம் முழுவதும் பாதிப்புகளை உணரவைத்தது.

**இடர் தணித்தல்**

- சுனாமி எச்சரிக்கை மையத்திலிருந்து வரும் தகவல்களைக் கேட்டு அறிய வேண்டும்.
- கடற்கோள் குறித்து முன்னெச்சரிக்கையினைத் தொடர்ந்து உடனடியாக மக்கள் கடற்கரைப் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும்
- கடுமையாகப் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடியாக முதலுதவி செய்ய வேண்டும்.
- மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக்கூடாது.
- முதலில் உருவான அலை மட்டுமே அபாயகரமானதாக இருக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. அதைத் தொடர்ந்து வரும் அலைகளும் அபாயகரமானவையாகவே இருக்கும்.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை

# சுனாமி


- கடலின் அடியில் ஏற்படும் மாற்றத்தால் உருவாகும் மிகப்பெரிய கடல் அலையே சுனாமி ஆகும்.



- கடல் நீர் பெருகி ஆழிப்பேரலையாக பெரிய அழிவை ஏற்படுத்துகிறது சுனாமி குறித்த தகவல்களுக்கு உள்ளூர் வானொலி மற்றும் தொலைக்காட்சி கேட்கவும் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லவும்.

- குழந்தைகள், கருவுற்ற பெண்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவவும்.

- வதந்திகளை பரப்பக்கூடாது.



மாநில அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1070 | மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1077 | கைப்பேசி செயலி: tnsmart

94458 69848 @tnsdma tnsdma Tamilnadu tn_sdma www.tnsdma.tn.gov.in

## 7. புயல்கள்

புயல் எப்பொழுதும் பலத்த காற்றுடன் பெரும் மழையையும் வெள்ளப்பெருக்கையும் ஏற்படுத்துகின்றது. இது மரங்கள் வேருடன் சாய்தல், வடிகால் அமைப்புகளைப் பாதித்தல், மின்சாரத் துண்டிப்பு, போக்குவரத்து துண்டிப்பு, நீர் தேங்கதல், நோய்கள் பரவுதல், பயிர்கள் அழிவு, மண் அரிப்பு, பழைய கட்டடங்கள் சிதைவடைதல் ஆகியவற்றோடு உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்துகின்றன.

**இடர் தணித்தல்**

- மக்களைத் தாழ்வான பகுதியிலிருந்து அருகில் உள்ள உயரமான பகுதிகளுக்குச் செல்ல அறிவுறுத்த வேண்டும்.
- நீர் தேங்கியுள்ள பகுதிகளில் நீர் வடிய தற்காலிக கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.
- பழைய கட்டடங்களில் வசிக்கும் மக்களைத் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும்.
- மக்களின் உடைமைகள், முக்கிய ஆவணங்கள், அணிகலன்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.
- குடிநீர் குழாய்களைப் பாதுகாப்பது அவசியமாகும்.
- மக்கள் அருகில் உள்ள மின்சாரக் கம்பங்களிலிருந்து கம்பிகள் அறுபட்டு மின் கசிவுகள் இருக்கின்றதா எனக் கவனிக்க வேண்டும்.
- மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.
- உள்ளூர் வானொலி மற்றும் தொலைக்கட்சியில் சொல்லப்படும் குறிப்புகளை அனைவரும் கவனிக்க வேண்டும். நோய்கள் பரவுவதை தடுப்பதற்காக அனைவரும் கொதிக்க வைத்த நீரையே பருக வேண்டும்.


தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை
புயல் (அ) சூறாவளி
விலை உயர்ந்த பொருட்கள், ஆவணங்கள், உணவுப் பொருட்களை நீர் புகாத பைகளில் பாதுகாத்து வைக்கவும்.
எச்சரிக்கை செய்திகளை தொடர்ந்து கேட்க வேண்டும்.
அரசு தரும் பாதுகாப்பு அறிவுரைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.
புயல், சூறாவளியின் போது கதவுகள், ஜன்னல்கள் உறுதிபட மூடிவைக்க வேண்டும்.
மீனவர்கள் கடலுக்குள் செல்லக்கூடாது.
வதந்திகளைப் பரப்பக் கூடாது.
துண்டித்து விழுந்த மின் கம்பிகளை மிதிக்கக் கூடாது.
வெள்ள நீரால் சுகாதார கேடுகள் நிகழாமல் முன்னெச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.
மாநில அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1070
மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1077
கைப்பேசி செயலி: tnsmart
94458 69848
@tnsdma
tnsdma Tamilnadu
tn_sdma
www.tnsdma.tn.gov.in

## 8. வெள்ளப்பெருக்கு

வெள்ளப் பெருக்கினால் கழிவுநீர் வடிகால் அமைப்பு அழிக்கப்படுதல், நீர் மாசுபடுதல், மண் அரிப்புகள், வண்டலபடிதல், நீர் தேங்குதல், வேளாண்மை நிலங்கள், கால்நடைகள் அழிக்கப்படுதல், மீன்பிடிச் சாதனங்கள் சேதப்படுதல் ஆகியவற்றோடு உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன.

**தமிழ்நாட்டிடன் வெள்ளப் பெருக்கிற்கு வாய்ப்புள்ள பகுதியில்**

- தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களான, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளுர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூக்குக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 14 மாவட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும், பருவ மழைக்காலங்களில், வங்காள விரிகுடாவில் ஏற்படும் காற்றழுத்த தாழ்வுநிலை மற்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஆகியவற்றின் தாக்கித்தினால் பெரிதும் பாதிகப்படும் நிலை உள்ளது.




## 9. வறட்சி

ஒரு பகுதியில் ஏற்படும் மழையளவு குறைவினால் ஏற்படும் குடிநீர்த்தட்டுப்பாடு, பயிர்கள் பாதிப்பு கால்நடைகள் தீவனம், தண்ணீர் இன்றி வறட்சி எப்பொழுது ஆரம்பிக்கிறது. எப்பொழுது முடிகிறது என்பதைத் தெரிவிப்பது கடினமாகும். இந்திய வானிலைத் துறையின் கூற்றின்படி, பற்றாக்குறையான மழைப்பொழிவே வறட்சிக்கு முக்கிய காரணம். பற்றாக்குறையான மழைப்பொழிவிற்குப் பருவகாலம் பொய்த்ப போரதால் உருவாகும் போதுமான மழைப்பொழிவின்னை, பருவகால மாறுபாடுகள், காடுகள் அழிவு, சுற்றுச்சூழல் சீர்கேடு, அதிக அளவு ஆவியாதல், மோசமான நில மேலாண்மை, தீவிர மேய்ச்சல் மற்றும் மண் அரிப்பு ஆகியன முக்கிய காரணங்களாகும்.

மற்ற விளைவுகளாவன

1. குடிநீர்த்தட்டுப்பாடு
2. புன்செய் பயிர்கள் போதுமான மழை பெய்யாததால், மண்ணில் ஏற்படும் வறண்ட நிலையால், ஈரப்பதம் குறைவதால் பாதிக்கப்படுகின்றன.
3. பாசன நீர்த்தேக்கங்கள், ஏரிகள், பாசனக் கிணறுகளில் நீர் மட்டம் குறைவதால் நன்செய் பயிர்களின் உற்பத்தி பாதிக்கப்படும்.
4. கால்நடைகள் குடிப்பதற்கு நீரும், உணவாகப் பயன்படும் பசும்புல், வைக்கோல் இன்றி தவிக்கும்
5. ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏற்படும் நோய்கள்
6. போதிய உணவு உற்பத்தி குறைவதால், உணவுப்பற்றாக்குறை

**இடர் தணித்தல்**

- மாற்றுப் பயிர் மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறை மூலம் பாசன நீர் உபயோகத்தில் சிக்கனத்தை பின்பற்றுதல்.
- மழைநீரைச் சரியான முறையில் சேமித்து, பயன்படுத்துதல்
- வறட்சிப் பிரதேசங்களில கால்நடை உணவு, குடிநீர் ஆகியவற்றை ஏற்படுத்துதல்
- வறட்சி நிவாரணத் திட்டமிடுதலை கிராம அளவில் கொண்டு வருதல்
- உணவு தேவைப்படும் பகுதிகளுக்கு ஏற்ப இறக்குமதி செய்து விநியோகித்தல் என்பது முக்கியமான ஒன்றாகும்.



தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை
வறட்சி
வறட்சி என்பது மழையளவு குறைவினால் ஏற்படுவது
வானிலை வறட்சி, இயல்பான மழையை விட குறைவான மழையால் ஏற்படுவது.
நீர் வளங்களின் வறட்சி, ஏரிகள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள் வறண்டு விடுவதால் ஏற்படுவது.
வேளாண்மை வறட்சி
வேளாண்மைக்கான நீர் மற்றும் ஈரப்பதம் பற்றாக்குறையினால் ஏற்படுவது.
வறட்சி தணிப்பு நடவடிக்கைகள்
நீர்நிலைகளை பலப்படுத்துதல்.
தடுப்பணைகளை ஏற்படுத்துதல்.
மழைநீர் சேகரிப்பு.
பாசனத்திற்கான உயர் தொழில்நுட்பம்.
தண்ணீரை மறுசுழற்சி செய்தல்.
தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துதல்.
தண்ணீரை சேமித்தல்.
வறட்சி தாங்கும் பயிர்களை ஊக்கப்படுத்துதல்.
பயிர் சுழற்சி முறை.
மாநில அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1070
மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1077
கைப்பேசி செயலி: tnsmart
94458 69848
@tnsdma
tnsdma Tamilnadu
tn_sdma
www.tnsdma.tn.gov.in

## 10. நிலச்சரிவு

**தமிழ்நாட்டில் நிலச்சரிவு ஏற்படக்கூடிய மாவட்டங்கள்**

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து நிலச்சரிவு பாதிப்பு ஏற்படுகிறது. ஈரோடு, திருப்பத்தூர், சேலம், திண்டுக்கல், தேனி மாவட்டங்களிலும், மண்சரிவு, பாறைச்சரிவுகள் ஏற்படுகின்றன.

(பங்கேற்பாளர்களின் தகவல்களோடு ஏற்படும் பாதிப்புகளை பட்டியலிடவும்)

நிலச்சரிவு ஏற்படக் காரணங்களை தொகுக்கவும்.



## 11. நிலநடுக்கம்

குறிப்பிட்ட நிலப்பகுதியில், குறைந்த நேரத்தில் பூமியின் அடிப்பகுதியில், திடீறென்று ஏற்படுகின்ற அதிர்வே நிலநடுக்கம் ஆகும். பெரும்பாலான நில அதிர்வுகள் ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே நிகழ்கின்றன. சில சமயங்களில் 3 அல்லது 4 நிமிடங்கள் கூட இவை நீடிக்கலாம். பூமிக்கடியில் நில அதிர்வானது, எந்த இடத்தில் தோன்றுகிறதோ, அந்தப் புள்ளியே நிலநடுக்க மையம் எனப்படுகிறது. நிலநடுக்க மையப்புள்ளிக்குச் செங்குத்தாகப் புவியின் மேற்பரப்பில் உள்ள புள்ளியை நிலநடுக்க வெளிமையம் என்கிறோம்.

**நிலநடுக்கப் பாதிப்பு**

நிலநடுக்கத்தினால் திடீரென்று வீடுகள் இடிந்து விழகின்றன. அதனால் பெருமளவில் மனித உயிரிழப்பு ஏற்படுகிறது. வீடுகளின் உறுதித்தன்மையானது, உள்ளூரில் நிலவும் காலநிலை, பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருள்களின் தன்மை, வழக்கத்தில் உள்ள வீடுகட்டும் முறை ஆகியவற்றைப் பொறுத்தே கட்டடத்தின் உறுதி அமைகிறது. எனினும் நிலநடுக்கப் பாதிப்பிலிரந்து தப்பித்திட அல்லது பாதுகாத்திட புதிய உத்திகளைப் பயன்படுத்தி, வீடுகளை அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

**பேரிடரின் போது செய்யச்கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை**

**நிலநடுக்கம் (பாதுகாப்புக் கருதி செய்யக்கூடியவை மற்றும் செய்யகூடாதவை)**

**நிலநடுக்கத்தின் போது வீடு அல்லது கட்டடத்தின் உள்ளே இருத்தால்**

- பதற்றமடையாமல் அமைதியாக இருக்கவும்
- கண்ணாடியாலான சன்னல்கள், கதவுகள், நிலைப்பேழை, முகம் பார்க்கும் கண்ணாடிகள் ஆகியவற்றிலிருந்து விலகி நிற்கவும்.
- மேற்கூரையிலிருந்து இடிந்து விழுகின்றன பூச்சு, செங்கற்கள், கற்கள் ஆகியவற்றிலிருந்து விலகி நிற்கவும்.

- மேசைக்கும் அடியில் அல்லது எளிதில் உடையாத கட்டிலுக்கு அடியில் அமரவும். இதனால், இடிந்து விழுகிற பொருள்களால் காயம் ஏற்படாமல் இருக்கும்.
- கதவினை நோக்கியோ, மாடிப்படியினை நோக்கியோ ஓடாமல் இருக்கவும், ஏனெனில், கதவோ, மாடிப்படிகளோ உடைந்து விழும் நிலை அல்லது நெருக்கடி ஏற்படலாம்.
- அறையின் மூலையில் அமர்ந்து, இரு கைகளினாலும் கழுத்தின் பின்பகுதியை இறுக்கமாகப் பிடித்துக் குனித்து கொள்ளவும்.

**நிலநடுக்கத்தின் போது வீடு அல்லது கட்டடத்தின் வெளியே இருந்தால்**

- திறந்தவெளி அருகாமையில் இருந்தால், அங்கே விரைந்து செல்வது நல்லது
- உயரமான புகைப்போக்கிகள், உயரமான கட்டடங்கள், உப்பரிகைகள், அறிவிப்புப் பலகைகள், மாடி முகப்பு ஆகியவற்றிலிருந்து விலகி நிற்கவும்.
- தெருக்களில் ஓடாமல், ஒரிடத்தில் இருக்கவும் ஏனெனில் கட்டடங்கள், மின்கம்பிகள், பாலங்கள், சாலையோரத்தில் உள்ள பெரிய விளம்பரப் பலகைகள் முதலியன உங்கள் மேல் விழக்கூடும்.

**நிலநடுக்கத்திற்குப் பின்னர்**

- உங்களுக்கோ, பிறருக்கோ காயங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை உற்றுக் கவனிக்கவும், முதலில் வெட்டுக்காயத்திற்கும், கன்றிப்போன காயத்திற்கும் முதலுதவி செய்யவும்.
- மின் இணைப்புப் பொருள்களான குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பொட்டி மற்றும் எரிவயு ஆகியவற்றின் இணைப்புகளை துண்டிக்கவும்.
- உலர் மின்கலம் மூலம் இயங்கக்கூடிய வானொலியை முக்கியமான தகவல்களைக் கேட்பதற்குப் பயன்படுத்தவும்.

- தொடர் நிலநடுக்கங்களுக்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்

**செய்ய கூடாதவை**

- பாதிப்புக்கு உள்ளான பகுதி அல்லது கட்டடங்களுக்கு அருகாமையில் இருக்க வேண்டாம்.
- தண்ணீரை வீணாக்க வேண்டாம். ஏனெனில் உடனடித் தேவைகளில் ஒன்றான தண்ணீர், தீயை அணைப்பதற்கு அவசியமாகும்
- கடுமையான காயம் அடைந்தோரை இடம் பெயரச் செய்ய வேண்டாம்
- மருத்துவ உதவி வரும் வரை அமைதி காக்கவும்
- வதந்திகளைப் பரப்பிட வேண்டாம். அது மக்களிடையே பீதியை ஏற்படுத்தும், பய உணர்வின் காரணமாக நிலைமை மேலும் மோசமாக்க கூடும்.


தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை
நிலநடுக்கம் பாதுகாப்பு
நில அதிர்வு ஏற்பட்டவுடன் தரையோடு தரையாக அமர்ந்து கொள்ளவும்.
உங்களை முழுவதுமாக ஒரு பலமான மேசையின் கீழ் மறைத்துக் கொள்ளவும்.
ஒரு கையால் மேசையை பிடித்துக்கொள்ளவும். மறு கையால் தலையை பாதுகாக்கவும்.
நில அதிர்வு நின்றவுடன் அமைதிகாத்து முறையாக வரிசையில் நிற்கவும்.
பதட்டப்படாமல் கட்டடத்தை விட்டு பாதுகாப்பாக வெளியேறவும்.
பாதுகாப்பான இடத்தை அடையவும்.
மாநில அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1070
மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1077
கைப்பேசி செயலி: tnsmart
94458 69848
@tnsdma
tnsdma Tamilnadu
tn_sdma
www.tnsdma.tn.gov.in

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை

# நிலநடுக்கம்



- பூமிக்கு அடியில் ஏற்படும் அசைவால் திடீரென உருவாகும் அதிர்வலையே நில நடுக்கம் ஆகும்.
- பாதுகாப்பற்ற கட்டடங்களில் இருக்கக்கூடாது.
- முதலுதவி பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.
- காயங்கள் ஏற்பட்டு உள்ளதா என்பதை சோதித்து பார்க்க வேண்டும்.
- அரசு தரும் முன்னெச்சரிக்கைகளை கவனமாக பின்பற்ற வேண்டும்.



- நில நடுக்கம் ஏற்படும் பொழுது கூட்டமான கடைகளிலோ பொது இடங்களிலோ எளிதில் பொருட்கள் சரிந்து விழும் இடத்தில் நிற்கக்கூடாது.
- கட்டட இடிபாடுகளில் சிக்காமல் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும்.
- கடற்கரையில் இருப்பதை தவிர்க்கவும் ஏனென்றால் சுனாமி உருவாகலாம்

மாநில அவசர கட்டுப்பாட்டு அறை எண்: **1070** | மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை எண்: **1077** | கைப்பேசி செயலி: tnsmart

94458 69848 @tnsdma tnsdma Tamilnadu tn_sdma www.tnsdma.tn.gov.in

## 12. இடியுடன் கூடிய மழை, மின்னல் தாக்குதல்கள்



## 13. அனல்காற்று


தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
அனல் காற்று வீசும் காலங்களில்
கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்
வெளிர் நிறமுள்ள, காற்றோட்டமான பருத்தி ஆடைகளை அணியவும்.
கை விசிறிகளை இளைப்பார உபயோகிக்கவும்
கண்ணாடி, மற்றும் காலணி அணிந்து குடையின் பாதுகாப்புடன் செல்லவும்.
Absorbs heat
Reflects heat
Help line
State 1070
District 1077
www.tnsdma.tn.gov.in
Download TN SMART app from Playstore
Follow TNSDMA on
Commissionerate of Revenue Administration and Disaster Management


தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
அனல் காற்று வீசும் காலங்களில்
கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்
குழந்தைகளை வெயில் காலங்களில் வாகனங்களில் தனியே விட்டுச்செல்லக் கூடாது – அடைக்கப்பட்ட வாகனங்களில் வெப்பம் அதிகமாகி, குழந்தைகள் உயிருக்கு ஆபத்து விளைவிக்ககூடும்
Help line
State 1070
District 1077
www.tnsdma.tn.gov.in
Download TN SMART app from Playstore
Follow TNSDMA on
Commissionerate of Revenue Administration and Disaster Management


தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
அனல் காற்று வீசும் காலங்களில்
கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்
குழந்தைகளுக்கான குறிப்புகள்
✓ பருக இளநீர் போன்ற திரவங்களை கொடுங்கள்
✓ குழந்தைகளுக்கான வெப்ப தொடர்பான நோய்களை எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பதை அறியவும்
✓ குழந்தைகளின் சிறுநீரை சோதித்துப்பார்க்கவும், மஞ்சள் நிறமுள்ள சிறுநீர் நீரிழப்பை குறிக்கலாம்
Help line
State 1070
District 1077
www.tnsdma.tn.gov.in
Download TN SMART app from Playstore
Follow TNSDMA on



தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
அனல் காற்று வீசும் காலங்களில்
கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்
கால்நடைகளுக்கு நிழல் தரும் கூரைகள் அமைத்து போதிய வசதி செய்து கொடுக்கவும். அவசியமாக குடிக்க தண்ணீர் கொடுக்கவும்
செல்லப் பிராணிகளை வெயில் காலங்களில் வாகனங்களில் தனியே விட்டுச் செல்லக் கூடாது
Help line
State 1070
District 1077
www.tnsdma.tn.gov.in
Download TN SMART app from Playstore
Follow TNSDMA on




தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
அனல் காற்று வீசும் காலங்களில்
கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்
முதியவர்களுக்கான குறிப்புகள்
✓ தனியே வசிக்கும் முதியவர்களின் உடல்நிலையை தினமும் இருமுறை சரிபார்க்கவும்
✓ தொலைபேசி முதியவர்களின் அருகாமையில் உள்ளதா என உறுதிப்படுத்தவும்
✓ வெப்ப அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றினால், அவர்களின் வெப்பத்தை தணிக்க ஈரமான துண்டுகளை கழுத்து மற்றும் கைகளில் வைக்கவும்; குளிர்ந்த நீரில் குளிக்கவைக்கவும்
✓ போதிய இடைவேளைகளில் நீர் அருந்துவதை உறுதி செய்யவும்
ORS
Help line
State 1070
District 1077
www.tnsdma.tn.gov.in
Download TN SMART app from Playstore
Follow TNSDMA on




தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
அனல் காற்று வீசும் காலங்களில்
கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்
கால்நடைகளுக்கான குறிப்புகள்
✓ கால்நடைகளை நிழல் தரும் கூரை அடியில் கட்டவும்
✓ அவசியமாக போதுமான அளவு தண்ணீர் கொடுக்கவும்
✓ கால்நடை தீவனங்களை வெட்ட வெளியில் போடவேண்டாம்
✓ அடைக்கப்பட இடத்தில் கால்நடைகளை கட்ட வேண்டாம்
✓ பறவைகளுக்கு போதுமான நிழற்கூரைகள் அமைத்துக் கொடுத்து போதுமான நீர் கொடுக்கவும்
Help line
State 1070
District 1077
www.tnsdma.tn.gov.in
Download TN SMART app from Playstore
Follow TNSDMA on

## 14. **தீ விபத்துகள்**



தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை
தீ விபத்து
தீ விபத்து குறித்து தீயணைப்புத் துறைக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.
தீ விபத்தில் காயமுற்றோருக்கு உரிய முதலுதவி செய்த பின்பு மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும்.
கட்டடத்தில் இருந்து தப்பிக்கும் போது தரையில் குனிந்தபடி தப்பிக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் புகையினைச் சுவாசித்து உயிரிழக்க நேரிடும்.
உடைகளில் தீ பிடித்தால் தரையில் படுத்து, உருண்டு, தீயினை அணைக்க வேண்டும்.
தீ விபத்து ஏற்படும்போது கூச்சலிட்டோ, விசில் அடித்தோ, சுவர்களில் தட்டியோ அனைவரையும் எச்சரிக்க வேண்டும்.
தீ விபத்தின் போது மின்சாரம், சமையல் எரிவாயு கலன் ஆகியவற்றின் இணைப்பை துண்டிக்க வேண்டும்.
வீடுகள் / பள்ளி / அலுவலகங்களில் தீயை அணைப்பதற்கான உபகரணங்களை பொருத்தி பாதுகாக்க வேண்டும்.
மாநில அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1070
மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை எண்: 1077
கைப்பேசி செயலி: tnsmart
94458 69848
@tnsdma
tnsdma Tamilnadu
tn_sdma
www.tnsdma.tn.gov.in